


**நள்ளிரவு என்பதால் எப்படி ஓடி தப்பிப்பது என்று தெரியாமல் போன மாணவர்கள், கல்லூரி முன்பு இருக்கும் முத்துநகர் பாலத்தில் இறங்கி தண்ணீரில் கும்பல், கும்பலாக இறங்கி ஓடியுள்ளனர்...**


ராமநாதன்

ஏன் மாணவர்கள் கலவரம் செய்தனர்?

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வட மாநில மாணவர்கள் சுமார் 3,000 பேர் ஹாஸ்டலிலும், நகரத்திலும் தங்கிப் படித்து வருகின்றனர். வட மாநில மாணவர்கள் ஹோலி பண்டிகைக்கு விடுமுறை இல்லாமல் போன ஆதங்கத்தில் இருந்தனர். அந்த நேரம் சிதம்பரம் மாரியம்மன் கோயில் தெருவில் தங்கிப் படிக்கும் கௌதம்குமார், ஹோலியை நண்பர்களுடன் கொண்டாடிவிட்டுத் திரும்பும் போது விபத்தில் சிக்கிக் கொண்டான்.

இதில் மேலும் ஆத்திரமடைந்த மாணவர்கள் தேர்வு நிலையம், ஆஸ்பிட்டல் என்று கண்ணில் பட்டதை எல்லாம் அடித்து நொறுக்கினர். நிலைமை கட்டுக்கடுங்காமல் போனதால் போலீஸ் பட்டாளம் அங்கு குவிக்கப்பட்டது. போலீஸின் சமாதானம் எதுவும் மாணவர்களிடம் எடுபடாமல் போகவே தடியடியை நடத்தத் துவங்கினர். மறுபுறம் பக்கத்து மாவட்டங்களில் இருந்தும் போலீஸ் குவிக்கப்பட, மாணவர்களும் கூடிவிட்டனர். அப்போது நடந்த தடியடியில் இருந்து தப்பிக்க மாணவர்கள் கிடைத்த வழிகளில் எல்லாம் ஓடினர்.

நள்ளிரவு என்பதால் எப்படி ஓடி தப்பிப்பது என்று தெரியாமல் போன மாணவர்கள், கல்லூரி முன்பு இருக்கும் முத்துநகர் பாலத்தில் இறங்கி தண்ணீரில் கும்பல், கும்பலாக இறங்கி ஓடியுள்ளனர். இதில் தண்ணீரில் சுமீத்குமார் என்ற என்ஜினியரிங் 2ஆம் ஆண்டு மாணவன் பலியாகிவிட்டான்.

தண்ணீரில் மாணவன் இறந்த தகவல் பரவியதும் என்ஜினியரிங் கல்லூரி மாணவர்களிடம் மேலும் பதற்றம் தொற்றிக் கொண்டது. உடனே தடாலடியாக ஆர்.டி.ஓ.வை வரவழைத்தனர். மாணவர்களின் முகவரிகளை வாங்கிக் கொண்டு, போலீஸார் தயார் பண்ணி வைத்திருந்த பேருந்தில் அனைத்து மாணவர்களையும் சென்னை சென்ட்ரலுக்கு அழைத்துப் போய் பீஹாருக்கே வழியனுப்பினர்.

அப்போதுதான் 'இரண்டாம் ஆண்டு மாணவர்கள் இருவரை காணவில்லை' என்ற தகவல் வந்ததும் மீண்டும் முத்துநகர் கால்வாயில் தேடுதல் பணி துவங்கியது. சுமார் 20 மணி நேரத்திற்குப் பிறகு அந்த இரண்டு மாணவர்களின் சடலமும் தண்ணீரில் இருந்து எடுக்கப்பட்டது. அதேநேரம் 'தண்ணீரில் 10 மாணவர்கள் பிணம் உள்ளது, 15 மாணவர்களின் பிணம் உள்ளது' என்று வதந்திகள் பரவ பல்கலையில் மற்ற மாணவர்களிடமும் மேலும் பதற்றம் பரவத் தொடங்கியது. ஆனால் அது எல்லாமே வதந்திகள் என்று முடிவு செய்யவே போலீஸுக்கு 'போதும் போதும்' என்றாகி விட்டது.

உடனே ஒட்டுமொத்த பல்கலைக் கழகத்துக்கும் காலநிலை இல்லாமல் விடுமுறை அறிவித்துள்ளது பல்கலை நிர்வாகம். போலீஸ் துணையோடு ஹாஸ்டலில் இருந்த மாணவர்களையும், வெளியில் தங்கியிருந்த மாணவர்களையும் அவரவர் வீட்டுக்கு அவசரமாக அனுப்பி வைத்துவிட்டது.

இந்தச் சம்பவம் பற்றி நம்மிடம் பேசிய சில பேராசிரியர்கள், "இங்குள்ள என்ஜினியரிங் கல்லூரியில் சுமார் 750 பேர் வரைதான் அனுமதிக்கப்படலாம். ஆனால் 6000 பேர் வரை சேர்க்கப்படுகின்றனர். இதில் வெளிமாநில மாணவர்கள் வெறும் 22 பேரைத்தான் சேர்க்க வேண்டும். அதுவும் மத்திய அரசு பணியாளர்கள், ராணுவ வீரரின் வாரிசுகளுக்காக ஒதுக்கப்படும் இடங்கள் இவை. ஆனால் இங்கு 5000 வட இந்திய மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இங்குள்ள புரோக்கர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று அங்கு விளம்பரம் கொடுத்து, அந்த மாணவர்களை இங்கு அழைத்து வந்து சேர்க்கின்றனர். இதற்கு ஆயிரக்கணக்கான போலி இருப்பிடச் சான்றுகள், பல்கலைக் கழக வளாகத்தில் கூடிக்கூடி விற்கப்படுகிறது. இது முன்பே கூட போலீஸ் கேஸ் ஆகியுள்ளது.

இப்படி சேர்க்கப்பட்ட வட இந்திய மாணவர்கள் இங்கு தனி ராஜாங்கமே நடத்துகின்றனர். காரணம் இவர்கள் அனைவருக்கும் ஹாஸ்டல் வசதி கல்லூரியில் இல்லை. 20 முதல் 30 சதவீதம் மாணவ, மாணவிகளுக்குத்தான் ஹாஸ்டல் வசதிகள் இருக்கின்றன. மீதியுள்ளவர்கள் பல்கலைக் கழக வட்டாரத்தில் உள்ள வீடுகளை வாடகைக்கு எடுத்துத் தங்கியிருக்கிறார்கள். அதனால் 2000 ரூபாய்